Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 21, 2023

புதன்கிழமை ஜூன் 21, 2023 | ஒளி: 09 கதிர்: 023 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | FREE

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில்

# பாலியல் இலஞ்ச எண்ணக்கரு

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மகிழ்ச்சி



பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு சார்பில் பாலியல் இலஞ்சம் தொடர்பான எண்ணக்கரு, ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மகிழ்ச்சியடைவதாக, ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் அவர் இதனை தெரிவித்ததுடன், பாராளுமன்றத்தில் இன்று (21) விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படவுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்திற்கு பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தால் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பாலியல் நாட்டம்' எனும் குற்றத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும், 'நாட்டம்' என்பதன் மூலம் குற்றம் சிறிதாக்கப்படுவதாகவும்,

தொடர்ச்சி P2



## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைப்பு

பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை செவ்வாய்க்கிழமை (20) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் 10 ரூபாயால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மா விலை குறைக்கப்பட்டுள்ளமையை கருத்திற்கொண்டு, நுகர்வோருக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

கானகத்தில் கதிர்காம பாதயாத்திரை

## காரிகை கரியால் பலி

வி.ரி.சகாதேவராஜா

கதிர்காம ஆடி வேல்விழா உற்சவத்திற்காக காட்டுப் பாதையில் பாதயாத்திரை சென்ற பெண்ணொருவர் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பாதயாத்திரை ஆரம்பமாகி இரண்டாம் நாள் (13) நாவலடிக்கு அப்பால் நடுக்காட்டில் இடம் பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## பெட்ரிசியாவை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்

இங்கிலாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பெட்ரிசியா ஸ்கொட்லண்டை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பொதுநலவாய அமைப்பில் முன்னெடுக்கப்படவுள்ள டிஜிட்டல் மயமாக்கல் செயற்றிட்டம் தொடர்பில் அமைப்பின் செயலாளர் நாயகம் - ஜனாதிபதி இடையே கலந்துரையாடப்பட்டு உள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு அரசின் வழிமுறைகள் மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது கருத்து தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான அரசாங்கத்தின் மூலோபாயங்கள் மற்றும் முயற்சிகளுக்கு பொதுநலவாய நாடுகளின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும் என்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.




## வலுப்பெறுகிறது இலங்கை ரூபாய்

இலங்கை மத்திய வங்கி, செவ்வாய்க்கிழமை (20) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 297 ரூபாய் 28 சதமாக குறைந்துள்ள அதேவேளை விற்பனை விலை 314 ரூபாய் 38 சதமாக குறைந்துள்ளது.

திங்களன்று (19) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 297 ரூபாய் 53 சதமாகவும் விற்பனை விலை 315 ரூபாய் 12 சதமாகவும் பதிவாகியிருந்தது.

தொடர்ச்சி P2



## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை

உள்நாட்டு கடனை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் நாட்டில் பல்வேறு தரப்பினர் தவறான தகவல்களை பரப்பி வருகின்ற போதிலும், அது தொடர்பில் அரசாங்கம் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்த நாட்டில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பது மிகவும் உணர்வுபூர்வமான விடயம். எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## சீமெந்துக்கான செஸ் வரி உயர்ந்தது

இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கான செஸ் வரி ஜூன் 17ஆம் திதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

1 கிலோ கிராம் செயற்கை வண்ணம் அல்லது நிறமற்ற சீமெந்துக்கான செஸ் வரி 3 ரூபாயில் இருந்து 5 ரூபாயாகவும் 50 கிலோ கிராம் அல்லது அதற்கும் குறைவான பொதிகளில் இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ கிராம் போர்ட்லேண்ட் சீமெந்துக்கான வரி 5 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால், 50 கிலோ கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட நிறை கொண்ட பொதிகளில் கொண்டு வரப்படும் மற்ற போர்ட்லேண்ட் சீமெந்து மீதான செஸ் 3 ரூபாயில் இருந்து 5 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



## சதி மூலம் அதிகாரத்துக்கு வருவதற்கு முயல்கின்றனர்

ஜனநாயக ரீதியில் ஒரு போதும் அதிகாரத்துக்கு வர முடியாதவர்கள், மக்கள் மனதில் வெறுப்பை விதைத்து, சதி மூலம் பதவிக்கு வர முயல்கின்றார்கள் என்றும் 69 இலட்சம் என்ற ஆணையை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

ஷாப்டர் மரண விவகாரம்

## அறிக்கைகளை பெறுமாறு சீஐடியினருக்கு உத்தரவு



வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகள் தொடர்பான அரச பகுப்பாய்வாளரின் அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுமாறு, குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய, செவ்வாய்க்கிழமை (20) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## ரூ.120 க்காவது நெல்லை கொள்வனவு செய்ய வேண்டும்

விவசாயிகளிடம் இருந்து குறைந்தது 120 ரூபாய்க்காவது நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

டெங்கு நுளம்பு ஒழிப்புக்கு பங்காற்றிய

## ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

### அரசாங்கத்திடம் அமைச்சர் பிரசன்ன கோரிக்கை



டெங்கு நுளம்பு ஒழிப்புக்கு பெரிதும் பங்காற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரம் செய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளருமான பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

சாரதி அனுமதிப்பத்திர செல்லுபடி காலத்தை

## 2 ஆண்டுகளுக்கு நீடிக்க தீர்மானம்




சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகவும் செல்லுபடியாகும் காலத்தை நீட்டிப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சில பொறுப்புக்கூறல் பிரேரணைகளை

## வருந்தத் தக்கவகையில் இலங்கை நிராகரித்தது



பொறுப்புக்கூறல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சில பிரேரணைகளை, வருந்தத்தக்க வகையில் இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## மலையக மக்களின் வாக்குகளை ஏலம் போட இடமளியேன்

ஆ.ரமேஸ்



இந்த நாட்டில் ஒட்டு மொத்தமாக மலையக மக்களின் 17 இலட்சம் வாக்குகள் இருப்பதாகவும் இந்த வாக்குகள் இல்லாமல் எதிர்காலத்தில் யாரும் ஆட்சியமைக்கவோ அல்லது ஜனாதிபதி ஆகவோ முடியாது என்றும் தெரிவித்த பதுளை மாவட்ட

தொடர்ச்சி P2

# 258 இலங்கை தமிழர் நிலை என்ன? காத்திருக்கிறது தமிழக அரசு



இலங்கையில் 1983 முதல் ஏற்பட்ட உள்நாட்டு போரால் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி அகதிகளாக உலகம் முழுவதும் புலம் பெயர்ந்தனர். தமிழகத்துக்கு 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 அகதிகள் வந்திருந்தனர். இதில் சுமார் 2 இலட்சத்து 12 ஆயிரம் பேர் இலங்கைக்கு திரும்பிச் சென்றுள்ளனர். தற்போதைய நிலைவரப்படி தமிழகத்தில் 1 இலட்சத்து 2 ஆயிரம் பேர், 108 மறுவாழ்வு முகாம்களிலும், வெளியிலும் தங்கியுள்ளனர்.

2012 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் இருந்து அகதிகளாக வருவோர், கைதுசெய்யப்பட்டு கடவுச்சீட்டு ஆவணச் சட்டத்தின் கீழும், சட்ட விரோதமாக வந்ததாகவும் வழக்குப் பதிந்து சிறைகளிலும், சிறப்பு முகாம்களிலும் அடைக்கப்பட்டு வந்தனர்.

2022 இல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அங்கிருந்து இதுவரை சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த 258 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடி வந்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பேக்கரி...

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவால் விசேட நுகர்வு பொருளாக கோதுமை மா பெயரிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அத்துடன், பாண் மற்றும் சிற்றுண்டி உணவுப் பொருட்களின் விலைகளை 10 ரூபாயால் குறைப்பதற்கு அறிவுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, கோதுமை மா, மரக்கறிகள் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும் பேக்கரி உரிமையாளர்கள் விலைகளைக் குறைக்கத் தவறியதாக பல்வேறு பிரிவினராலும் அண்மைய வாரங்களில் தெரிவிக்கப்பட்டு, விலை குறைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

## வலுப்பெறுகிறது...

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலரின் விற்பனை விலை 319 ரூபாய் 66 சதமாக பதிவாகியிருந்ததுடன், புதன்கிழமை (14) வெளியான நாணய மாற்று விகிதங்களின் படி டொலர் 300 ரூபாயை விட அதிகரித்திருந்தது.

## மலையக மக்களின்...

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் இந்த வாக்குகளை எதிர்காலத்தில் எவரும் ஏலம் போட இடமளிக்க மாட்டேன் என்று தெரிவித்தார்.

மத்துரட்ட பெருந்தோட்ட நிர்வாகத்தை பொறுப்பேற்று முகாமைத்துவம் செய்யும் ஹைபொரஸ்ட் தோட்ட நிர்வாகம், அத் தோட்ட தொழிலாளர்களுக்கு இழைத்து வரும் அநீதிகளுக்குத் தீர்வு காணும் வகையில் நுவரெலியா மாவட்ட தொழில் திணைக்களத்தில் திங்கட்கிழமை (19) காலை பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதையடுத்து இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

“இன்று இந்த நாட்டில் வாழும் ஒட்டு மொத்த மலையக மக்கள் பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ள அதேநேரத்தில் கல்வியில் சிறந்தவர்களாக, சிந்தித்து செயலாற்றக்கூடிய சக்தியுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இந்த நிலையில் கடந்த காலங்களைப் போல எமது மலையக மக்களின் வாக்குகளை யாரும் விலை பேசிட முடியாது. குறிப்பாக மலையக மக்களின் வாக்குகளை விலை பேசிட இடம் கொடுக்க மாட்டேன். ஆகவே மலையக மக்களுடைய இந்த 17 இலட்சம் வாக்குகள் இல்லாமல் யாரும் இந்த நாட்டில் அரசாங்கத்தை அமைக்கவோ அல்லது ஜனாதிபதி ஆகவோ முடியாது என்று நாம் ஒரு தீர்க்கமான முடிவு ஒன்றை எடுப்போம்.

அதேநேரத்தில் பெருந்தோட்ட மலையக மக்களுக்கும் மலையகத்தை சார்ந்த ஏனைய மக்களுக்கும் சமுர்த்தி உதவிகள், உலக வங்கியால் வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகள், வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எமது மக்களுக்கு வழங்குவது அரிதாக உள்ளது. ஆகவே மலையக மக்கள் யாவரும் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களாக காணப்படுவதால், நாட்டில் ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் உதவு பட்டியலில் இவர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் வேண்டுகோள் முன் வைத்துள்ளேன்.

அதேநேரம் ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பாக அதிகாரிகளை நியமித்துள்ளார். எனவே எதிர்காலத்தில் மலையகத்தை சார்ந்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் கிராம உத்தியோகஸ்தர்கள் பொறுப்புடன் செயலாற்றுவார்கள் என நம்புகிறேன் என்றார்.

## 2 ஆண்டுகளுக்கு...

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், செல்லுபடியாகும் காலத்தை நீட்டிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அச்சடிக்கும் அட்டைகள் பற்றாக்குறையால் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள், பாதுகாப்பு குறியீடு மற்றும் ஒரு வருட செல்லுபடியாகும் காலத்துடன் வழங்கப்பட்டன.

சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் அச்சடிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 8 இலட்சம் அட்டைகளை இன்னும் அச்சிட வேண்டும். நாளாந்தம் 4 ஆயிரம் அட்டைகள் அச்சிடப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

# பாலியல் இலஞ்ச எண்ணக்கரு

அதற்குப் பதிலாக ‘பாலியல் இலஞ்சம்’ எனும் பதம் மூலம் குற்றத்தின் தீவிரத்தன்மை சிறந்த முறையில் காட்டப்படுவதால், அதனை பயன்படுத்துமாறும் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘இலஞ்சம்’ சம்பந்தமாக, இலஞ்சம் வழங்கும் நபர் ஒருவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடியும் எனும் கருத்தைக் கொண்ட பிரிவைக் காரணமாகக் கொண்டு, ‘பாலியல் இலஞ்சம்’ என்பதில் உள்ள பாலினம் காரணமாக, பாலியல் இலஞ்சம் தொடர்பில், இலஞ்சம் வழங்கும் நபருக்கு அநீதி இழைக்கப்படக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பாலியல் இலஞ்சம் வழங்கும் நபருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதை தடுக்கும் வகையில், விதிவிலக்கொன்றை உள்வாங்குமாறு கோரிக்கை விடுப்பதாக பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு...

இலங்கையின் வங்கி மற்றும் நிதி கட்டமைப்பிற்கு எதிர்மறையான விளைவுகள் ஏற்படாத வகையில் மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு உகந்த மிகவும் சிறந்த மறுசீரமைப்பிற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

‘ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரு வழியில்’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையம் திங்கள் (19) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவுக்கும் போதே ஷெஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர், “உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் அரசாங்கம் எப்போதும் பொறுப்புடன் செயற்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாராளுமன்றத்தில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டார். மத்திய வங்கியும் நிதி அமைச்சும் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளன.

குறிப்பாக நம் நாட்டின் வங்கிக்கட்டமைப்பு, நிதிக்கட்டமைப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாத மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்க அவசியமான மறுசீரமைப்பிற்கு உகந்த தீர்வுகளை அனைவரும் தேடுகின்றனர். இது தொடர்பாக, நாடு முழுவதும் பல்வேறு தகவல்கள் மற்றும் அறிவிப்புகள் வெளியாகி வருகின்றன.

இது குறித்து அரசாங்கம் இறுதித் தீர்மானம் எடுத்தவுடன், பாராளுமன்றத்துக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கத் தயாராக உள்ளது. இது மிகவும் உணர்வுபூர்வமான விடயம். இது சந்தை நிலைமையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, இந்த மறுசீரமைப்பு தொடர்பாக சந்தேகங்களை எழுப்பும் அறிக்கைகளை வெளியிடாமல் இருந்தால் தான் , நமது நிதிச் சந்தையின் ஸ்திரத்தன்மையை நாம் தொடர்ந்து பராமரிக்க முடியும். அதற்கு நாம் அனைவரும் மிகவும் பொறுப்புடன் செயற்படுவது முக்கியம். இந்த விடயங்கள் அனைத்தையும் பற்றி, ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் பின்னர் குறிப்பாக வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சிறந்த புரிதல் ஏற்படும்” என்றார்.

## 258 இலங்கை தமிழர்...

இவர்களை கைது செய்யாமல் மனிதாபிமான அடிப்படையில் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தமிழக அரசு தங்க வைத்துள்ளது. மேலும் இவர்களுக்கு தங்குமிடமும் 3 வேளை உணவு மட்டுமே வழங்கப்படுகிறது.

இலங்கை பொருளாதார நெருக்கடியால் அகதிகளாக வந்துள்ளவர்களை எப்படிக் கருதலாம் என்பது குறித்த மத்திய அரசின் முடிவுக்காக கடந்த 15 மாதங்களாக தமிழக அரசு காத்திருக்கிறது.

தமிழக முகாம்களில் வசிப்போருக்கு ஏற்கெனவே வழங்கப்படும் சலுகைகளைப் போன்று, 258 பேருக்கும் புகலிடம் வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகளை வழங்க அனுமதிக்க வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## காரிகை...

குறித்த பெண் கதிர்காமத்திலிருந்து சுமார் 45 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நாவலடி தீர்த்தக்கிணற்று பகுதியால் பயணித்தபோதே காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் 63 வயதுடைய மட்டக்களப்பை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர் .

இதேவேளை சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காட்டுப் பாதை கடந்த 12ஆம் திகதி திறக்கப்பட்ட நாள் முதல் பத்து நாள்கள் வரை இதுவரை ஒரேயொரு துர்ச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், செல்வச் சந்நிதியிலிருந்து யாத்திரையை மேற்கொண்டு வந்த யாத்திரிகர் ஒருவர் மாமாங்கத்தில் திடீரென காலமாகியது தெரிந்ததே. பறவைக்குளம், கதிரமலை, கண்ட இடம் போன்ற இடங்களிலும் காட்டுயானைகளின் தலையீடு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வருந்தத்...

இலங்கைக்கு முன்னர் விஜயம் செய்த ஒரு டசின் ஐ.நா ஆணையாளர்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கு சுட்டிக்காட்டினார்.

பொறுப்புக்கூறல் மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கத்துக்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா தீர்மானங்களை அடுத்தடுத்த அரசாங்கங்கள் நிராகரித்த போதிலும், கடந்த தசாப்தத்தில் சிறப்பு அறிக்கையாளர் மற்றும் ஒரு செயற்குழு உட்பட அதிகாரிகளால் இலங்கைக்கு ஒரு டசின் விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்று 75 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகம் ஒரு முக்கியமான கட்டத்தில் இருப்பதாக குறிப்பிட்டார். உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கை உள்ளடக்கிய இரண்டு நாடுகளான சீனாவிலும் இந்தியாவிலும் முதன்முறையாக ஓர் இருப்பை நிறுவுவது தங்களுக்கு முக்கியம் என்று தான் நம்புவதாகக் கூறினார்.

## ஊழியர்களுக்கு...

ஜனாதிபதியின் செயலணியின் ஊடாகவும் ஆளுநர்களின் தலைமையிலும் மாகாண மட்டத்திலும் டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான விசேட வேலைத் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) விடுத்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

“தற்போது டெங்கு பிரச்சினை மிகவும் பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது. டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பயிற்சி பெற்ற குழு நியமிக்கப்பட்டது. டெங்கை கட்டுப்படுத்த முக்கிய பங்காற்றிய அந்தக் குழு நிரந்தரமாக்கப்படவில்லை. எனவே, இந்தத் தற்காலிக நியமனங்களைப் பெற்றவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். அப்போது டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக செய்ய முடியும்” என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவத்தார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, “எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை நான் 100 சதவீதம் ஏற்றுக்கொள்கிறேன். இவர்கள் 2016 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட குழு. இந்தக் குழுவுக்கு எந்த அடிப்படைத் தகுதியும் இல்லை. இவர்கள் 8 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். இப்போது அடிப்படைத் தகுதிகளைப் பார்க்க முடியாது. தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் போது, இவர்களுக்கும் வேலை வழங்குவதற்காக மூன்று அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால், அதற்கு உடன்படவில்லை என நிர்வாக சேவை தெரிவித்துள்ளது. அதில் எனக்கு உடன்பாடு இல்லை. இதை நான் கைவிட மாட்டேன். இதை மீண்டும் ஒருமுறை அமைச்சரவைக்கு கொண்டு வருகிறேன். தற்போது நாள் ஒன்றுக்கு 700 ரூபாய் ஊதியமாக வழங்கப்படுகிறது. அவர்கள் செய்யும் வேலையைப் பார்க்கும்போது, இந்தச் சம்பளத்தில் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது” என்றார்.

“பொதுவாக நாங்கள் விமர்சனம் செய்கிறோம். ஆனால் சுகாதார அமைச்சரின் சிறந்த நேர்மறையான பதிலுக்கு நாங்கள் அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்” என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

“ஜனாதிபதி செயலணியின் தலைமையில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விசேட வேலைத்திட்டத்தை தற்போது முன்னெடுத்து வருகின்றார்கள். மேலும் ஆளுநர்களின் தலைமையில் மாகாண மட்டத்தில் ஒரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும் டெங்கு ஒழிப்பு பணிகளில் உள்ளூராட்சி அமைப்புகள் பெரும் பங்களிப்பை அளித்து வருகின்றன. அந்தகக் குழுக்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. அவர்களின் சேவையை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம்” என்று அமைச்சர் பிரசன்ன குறிப்பிட்டார்.

## சதி மூலம்...

“கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டபோது எங்கள் கட்சி பெரும் புயலில் சிக்கியது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டன. கட்சியினர் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருந்தது. இந்த நேரத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனா கலைந்துவிடும் என்று பலர் நம்பினர். ஆனால், இன்றும் இந்த நாட்டில் மிகவும் பலமான மற்றும் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கட்சி ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தான்.

69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் நிபந்தனையின்றிரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறோம். அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து இன்று நான் மகிழ்ச்சியடைகிறேன். அப்போது அவர் சவாலை ஏற்று, நாட்டை கட்டியெழுப்புவார் என நினைத்தோம். வீழ்ந்த நாட்டை கட்டியெழுப்புதற்காக எடுக்கப்பட்ட சில முடிவுகள், மக்கள் ஆதரவு கிடைக்கும் முடிவுகள் அல்ல. ஆனால், அவை மிகவும் நல்ல முடிவுகள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனநாயக ரீதியாகவும் அகிம்சை ரீதியாகவும் செயற்பட்டு, இறுதியில் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போராடிய தலைவர், தனது வீடு தீக்கிரையாக்கப்பட்ட போது ஏன் அமைதியாக இருந்தார் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இவற்றை போராடடக்காரர்கள் பயன்படுத்தி கொண்டனர்.

மக்கள் மனதில் வெறுப்பையும் குரோத்தையும் திணித்தவர்கள், கடந்த காலங்களில், வீதிகள் அமைக்கும் போது, 10 சதவீதம் தரகுப்பணம் வாங்குவதாக விளம்பரம் செய்தனர். இந்தக் கதைகளால் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்கத் தொடங்கினர். ‘வயதான மைனா’ என்று ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

கொரோனாவால் இரண்டு வருடங்கள் வேலை செய்ய முடியவில்லை. அன்றைய தினம் மக்களின் உயிரைக் காப்பாற்ற போராட வேண்டியிருந்தது. நமது தலைவர்கள் மக்களுக்காக உழைத்தவர்கள். நாங்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியவுடன் போராட்டம் தொடங்கியது.

ஆனால், குறுகிய காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டை புதுப்பித்து, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடிந்ததையிட்டு இன்று நாம் மகிழ்ச்சியடைகிறோம். புயலில் சிக்கினால், உயரமான மரங்கள் மீண்டும் நேராகின்றன. புயலில் சிக்கிக்கொண்டோம்; நாங்கள் மீண்டும் வலுவாக எழுகிறோம்.

மூன்று சதவீத உறுப்பினர்களை வைத்து ஜனநாயகத்தின் மூலம் ஆட்சிக்கு வர முடியாதவர்கள், சதி மூலம் ஆட்சிக்கு வர முயலுகின்றனர். மக்கள் ஏற்கெனவே அவர்களை நிராகரித்து விட்டனர். போராட்டத்தில் இருந்து அலையை உருவாக்க முயன்றனர். ஆனால் தற்போது அந்த அலை மணலில் புதைந்து விட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்துவதற்காக மக்கள் மீண்டும் மொட்டுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்” என்றார்.

## அறிக்கைகளை...

அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்ட பல இரத்த மாதிரிகள் உட்பட பகுப்பாய்வு அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை என்று மேலதிக நீதவான் அறிவித்ததுடன், அந்த பகுப்பாய்வாளரிடம் இருந்து இந்த அறிக்கைகளைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதற்கிடையில், தேவைப்பட்டால், இந்த அறிக்கைகள் குறித்து அரசாங்க பகுப்பாய்வாளருக்கு நினைவூட்டல் அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக மேலதிக நீதவான் கூறினார்.

ஷாஃப்டரின் மரணத்துக்கான காரணத்தை விசாரிப்பதற்கு தடயவியல் நிபுணரான பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையில் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

அந்த நிபுணர்கள் குழுவால் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சடலத்தை தோண்டி எடுக்க வேண்டும் என்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கமைய சடலம், தோண்டி எடுக்கப்பட்டு, முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன. முதற்கட்ட பரிசோதனை அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ஷாஃப்டரின் சடலம் மீதான பிரேத பரிசோதனை குறித்த முழுமையான அறிக்கையை வெளியிடுவதற்கு இன்னும் 2 மாதங்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ரூ.120 க்காவது...

“நாட்டின் பொருளாதார சூழ்நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கப்படாது இருப்பதால் நாங்கள் எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் செய்ய முடியாத சூழ்நிலையில் எப்படி இவ்வாறான விவாதத்தில் கலந்துகொள்வது என்று யோசிக்கின்றோம். எவ்வாறாயினும் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூற வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 வயது மாணவன் இந்தியா தனுஸ்கோடியில் இருந்து தலை மன்னார் வரையில் கடலை நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளார். அந்த மாணவனுக்கு இந்தச் சபையின் ஊடாக வாழ்த்துகளை கூறிக்கொள்கின்றேன்.

இதேவேளை பாராளுமன்றத்தில் விவசாயிகள் சார்பாக எதிர்க்கட்சி தலைவர் முன்வைத்த கருத்துக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அவரின் கேள்விக்கு கூட அரசாங்கம் பதிலளிக்கவில்லை.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அறுவடை ஆரம்பித்துள்ள போதும், நெல்லை கொள்வனவு செய்வதற்கோ, அதற்கான விலையை நிர்ணயிக்கவோ நடவடிக்கை எடுக்காது இருக்கின்றனர். உற்பத்தி செலவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் விவசாயிகள் இருக்கின்றனர்.

இதனால் நெல்லை ஆகக் குறைந்தது 120 ரூபாய்க்காவது நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்” என்றார்.

# மயக்கமருந்து ஊசியே குழந்தையை கொன்றது

■ ஷேன் செனவிரத்ன

பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில், சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டரை வயது குழந்தைக்கு அளிக்கப்பட்ட மயக்கமருந்து ஊசி, விஷமடைந்ததால் அக்குழந்தை மரணமடைந்துள்ளது என்று சுகாதார வல்லுநர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள மயக்க மருந்துகள், தரம் குறைந்தவை. அவ்வாறான மயக்க மருந்துகளை அகற்றிவிடுமாறு சுகாதார அமைச்சிடம் பல முறை கோரிக்கை விடுத்துள்ள போதிலும், தரம் குறைந்த எந்தவொரு மருந்தும் இதுவரையிலும் அகற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### அறநெறிப் பாடசாலைகளில்

# ஒரு கைபிடி அரிசி சேகரிக்கும் செயற்றிட்டம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

அறநெறிப் பாடசாலைகளில் ஒரு கைபிடி அரிசி சேகரித்து, பிறர் உயிர்வாழ உதவும் செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் ஆலோசனைக்கமைவாக மாவட்டத்திலுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் உத்தியோகபூர்வ நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18) மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி. குணநாயகம் ஒழுங்கமைப்பில், களுவாஞ்சிகுடி பிரதேச செயலக பிரிவிலுள்ள சைவ மகாசபை அறநெறிப் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் அரிசி, அப்பிரதேசத்திலுள்ள சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு வழங்கப்படவுள்ளது. களுவாஞ்சிகுடி சைவ மகாசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. மதிசீலனின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.



# முல்லைத்தீவில் 120 பெண் தொழில் முயற்சியாளர்கள் தெரிவு

## பொருளாதாரத்தில் பெண்களின் ஸ்திரநிலை பேணும் கலந்துரையாடல்

■ செ. கீதாஞ்சன்

பெண்கள் பாதுகாப்பு இல்ல கண்காணிப்பு மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில், முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று (20) நடைபெற்றது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 120 பெண் தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளதுடன் அவர்களுக்கான பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கி, பெண்களை பொருளாதாரத்தில் ஸ்திரமான நிலையில் வைத்திருக்கும் நோக்கத்துடன் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாழ்வாதார உதவி, சுகாதார உதவி, திறன்விருத்தி, வியாபார நுட்பங்களை கற்றுக் கொடுத்தல், இணையவழி வியாபார நடைமுறை நுட்பம் முதலான விடயங்களை, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்க இதன்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபை பெண்கள் பிரிவின் திட்ட அதிகாரி நெமானிகா அமரசிங்க, ஐ.நா பெண்கள் பிரிவின் திட்ட அலுவலகர் பிரதீபா கலசேகர, முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் லிசோ கேகிதா, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி உமாமகள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயகாந்த், வெலிஓயா பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர், திறன் அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர் மற்றும் முகாமையாளர் உட்பட பெண்கள் அபிவிருத்தி மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானையால்

# வீடு, பயிர்கள் சேதம்

■ எஸ். கார்த்திகேசு

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மண்டானை கிராமத்துக்குள் நேற்று (20) அதிகாலை காட்டு யானை புகுந்து அட்டகாசம் செய்ததில் ஒரு வீடு உட்பட வாழ்வாதார பயிர்கள் நாசமாகியுள்ளன.

காட்டு யானை ஒன்று அதிகாலை 3.30 மணியளவில், கிராமத்துக்குள் புகுந்து, வேலியை தகர்த்துக்கு கொண்டு, வீட்டின் சுவரை உடைத்து, வீட்டுக்குள் இருந்த அரிசி வேக்கை



எடுத்து சாப்பிட்டுள்ளதுடன், தோட்டத்தில் நடப்பட்டு இருந்த மரவள்ளி, வாழை போன்ற பயிர்களையும் நாசம் செய்துள்ளது.

இரண்டு சிறுவர்கள் உட்பட, வீட்டில் உறங்கிக் கொண்டு இருந்தவர்கள், அலறி அடித்துக் கொண்டு ஓடி, தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு வந்த கிராம சேவையாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவரும் சேதங்களைப் பார்வையிட்டு அது தொடர்பான அறிக்கையை திருக்கோவில் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தி இருந்ததுடன் மேலதிக நடவடிக்கைகளை துறைசார் அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.



# “பால் உற்பத்தியை அதிகரிக்க தீவிர கவனம் செலுத்தவும்”

■ எஸ். கே. குமார்

மலையகத்தில் எதிர்வரும் காலங்களில் பசு மாடுகள் வளர்ப்பை ஊக்கப்படுத்தி, பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தமிழ் பிரதிநிதிக் குழு தலைவருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலானகாலப் பகுதியில் கால்நடை வளர்ப்பு படிப்படியாக குறைந்து வந்துள்ள நிலையில் கால் நடை வளர்ப்பாளர்களின் எண்ணிக்கையும் 90 வீதம் குறைந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கான புற்தரைகள்,புற்கள் மற்றும் காலநிலை வளங்களும் காணப்படும் நிலையில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட கால் நடை வளர்ப்பு தற்போது வீழ்ச்சி கண்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கிறனர்.

தற்போது நிலவும் பால்மா தட்டுப்பாடுகளுக்கு இதுவும் ஒரு காரணம் மற்றும் கால்நடைகளுக்கான வைத்திய வசதிகள் பெற்றுக்கொள்வதில் சிரமம், நல்ல இன கறவை பசுகள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது தொடர்பில் அரசாங்கமும் எந்தவித புதிய வேலைத்திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு முயற்சி எடுப்பதில்லை என்றார்.

கடந்த 20 வருடங்களுக்கு முன் அரசாங்க பாற்பண்ணைகளில் இருந்தும் நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் நல்ல இன கறவை பசுமாடுகள் இறக்குமதி செய்து கடன் அடிப்படையில் உற்பத்தியாளர்களுக்கு வழங்கினார்கள். ஆனால் அந்த வேலைத்திட்டத்தை தற்பொழுது செயல்படுத்துவதில்லை.

2001ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் கிராமிய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் நியமனம் பெற்றிருந்தார். அவர் அமைச்சு பதவி வகித்த காலத்தில் மத்திய மாகாணத்தில் மாத்தளை, கண்டி,மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி, பால் உற்பத்தி,மற்றும் பால்மா உற்பத்தி,பாலுணவு உற்பத்தி என அபிவிருத்தி கண்டிருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் நடைபவனி

யாழ். மாவட்ட சர்வமத செயற்குழுவானது மத நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் நடைபவனி, அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் (SOND) ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (20) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் காலை 8 மணியளவில் ஆரம்பித்து, வைத்தியசாலை முன் வீதியூடாக நூலகத்தை நடைபவனி வந்தடைந்தது.

இதன் போது தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் மோகனதாஸ், அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்தூராசா மற்றும் நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மதகுருமார் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




# கணவன் வெளிநாட்டில் வாவிக்குள் மனைவி

■ ஷேன் செனவிரத்ன

இரண்டு பிள்ளைகளின் தாயான 31 வயதான பெண்ணொருவர், கண்டி வாவிக்குள் பாய்ந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். அம்பிட்டிய, பல்லேகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இந்தப் பெண், செவ்வாய்க்கிழமை (20) அதிகாலை 3 மணியளவில் இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

தன்னுடை மகள் வீட்டில் இல்லாததை உணர்ந்த அப்பெண்ணின் தாய், அக்கம்பக்கத்தினரின் உதவியுடன் தேடிய போதே அப்பெண் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் அம்பலமானது.

அப்பெண்ணின் கணவன், சில மாதங்களுக்கு முன்னரே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்றுள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.



### அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின்

# கல்முனை கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம்

■ நூருல் ஹுதா உமர்

அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம், கல்முனை கிளை உபதலைவர் எம். எஸ் அப்துல் மலிக் தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம் றிபாஸ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டொக்டர் எம்.பி அப்துல் வாஜித் கலந்து கொண்டார். மேலும், பிராந்திய பணிமனைகளின் பிரிவு தலைவர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

விரைவில் ஓய்வு பெற உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சேவையைப் பாராட்டி, அவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



### மட்டக்களப்பு – காத்தான்குடி எல்லை பிரதேசங்களில்

# வடிகான்களை தூய்மைப்படுத்தவும்

■ ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு - காத்தான்குடி எல்லை பிரதேசங்களில் பிரதான வீதியில் இருக்கும் வடிகான்களில் கழிவுப் பொருட்கள் நிறைந்திருப்பதை அவதானித்த பொலிஸார், வடிகான்களைத் தூய்மைப்படுத்தி நீரை வழிந்தோடச் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

நேற்று (20) காலை காத்தான்குடி பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஏ.சி ஜவாஹிர் தலைமையிலான பொலிஸார், கழிவுப்பொருட்களால் அடைப்பட்டிருந்த குறித்த வடிகான்களை அடையாளம் கண்டு, உடனடியாக வடிகான்களைத் தூய்மைப்படுத்துமாறு உத்தரவிட்டனர்.

இவ்வாறு வடிகான்கள் கழிவுப் பொருட்களால் நிரம்பி, மழைநீர் மற்றும் கழிவுநீர் வடிந்தோட வசதியின்மையால், நீர் ஒரே இடத்தில் தேங்கி நின்று, டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

# கணவன் வெட்டிய மனைவியின் காலை ஒட்ட முடியவில்லை

கணவனால் துண்டு துண்டாக வெட்டப்பட்ட மனைவியின் காலை ஒட்டமுடியவில்லை என்று கம்பஹா வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மனைவி, துண்டாடப்பட்ட காலின் ஒருபகுதியுடன் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், தாமதித்து அனுமதிக்கப்பட்டமையால், காலைப் பொருத்தமுடியவில்லை என்று வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

குடும்பப் பிரச்சினை காரணமாக, கணவன் தன்னுடைய 42 வயதான மனைவியின் காலை துண்டாடியுள்ளார். பாதிக்கப்பட்ட கிரிந்திவெலயைச் சேர்ந்த அப்பெண், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும், நோயாளியை தாமதித்து அனுமதித்தமையால், துண்டாடப்பட்ட காலை பொருத்த முடியவில்லை. இருந்தபோதிலும், அவர் அவசர சத்திர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார் என்று வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

# அகில உலக ரீதியில் திருகோணமலை மாணவிகள் சாதனை

■ அ. அச்சுதன்

London Noisy Class room நடத்திய International Oratory Festival போட்டியில் (சூம் மூலம் நடைபெற்றது) கலந்து கொண்ட செல்வி பிரியங்கா உமாசங்கர், செல்வி தீப்சிக்கா பிரபாகரன் ஆகியோர் அகில உலக ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கல பதக்கத்தை வென்று, இலங்கை நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்கள்,







Green Tree English Academy திருமதி மரிய ஜெயந்தா ஆசிரியரின் கற்பித்தலின் கீழ் பயிற்றப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு மாவட்ட பொலிஸார் இரத்த தானம்



■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையங்களின் ஏற்பாட்டில் குருதிகொடை வழங்கும் நிகழ்வு நேற்று (20) முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்ட இந்தக் குருதி கொடை நிகழ்வில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கருநாட்டுக்கேணி, மாங்குளம், ஒட்டுசுட்டான், ஐயன்கன்குளம், நெட்டாங்கண்டல் ஆகிய பொலிஸ் நிலையங்களை உள்ளடக்கிய 120 வரையான பொலிஸ் உத்தியோகத்தர்கள் குருதி கொடை வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகளுடன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் வைத்தியர்களும் ஊழியர்களும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



# காலாவதியான மருந்துகளுக்கு குப்பைத் தொட்டியே சிறந்தது

ஒவ்வொரு வீட்டிலும் நோய் நிவாரணி குளிசைகள் கட்டாயம் இருக்கும்; வயோதிபர்கள் நோயாளிகளாக இருக்கும் வீடுகளிலும் நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகி இருப்போரின் வீடுகளிலும் குளிசைகளுக்கு பஞ்சமே இருக்காது. மூவேளைக்குமான குளிசைகளை காற்றுப்புகாத சிறிய ஜாடிகளில் போட்டு அடைத்துவைத்துக்கொள்வர்.

இதற்கிடையே மாதாந்தம் கிளினிக் செல்வோர், அந்த மாதத்துக்குரிய குளிசைகளைப் பெற்று, காற்றுப்புகாத ஜாடிகளில் அடைத்து வைத்துக்கொள்வோர், மாதம் முடியும் வரையிலும் அவற்றை வைத்துக்கொள்வார்கள். திடீரென நோய்வாய்ப்பட்டுவிட்டால், மருந்துகள் மற்றும் மாதாந்த கிளினிக் கொப்பியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வர்.

எனினும், திடீரென ஏதாவது சிறிய நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகிவிட்டால், வீட்டில் மூலைமுடுக்கெல்லாம் தேடி நோய்நிவாரணி குளிசையை கண்டுப்பிடித்து உட்கொள்வதற்கு முயல்வர். எனினும், அவ்வாறான குளிசைகளில் காலாவதியான திகதி குறிப்பிட்டிருக்காது. ஆகையால், அது தேவையில்லாத முயற்சியாகும்.

சிறியவர்கள் இருக்கும் வீடுகளில், மருந்துப் பொருட்கள், குளிசைகள், வலி நிவாரணிகளை கைக்கு எட்டாத தூரத்தில் வைக்குமாறு வைத்தியர்களும் அறிவுறுத்தல் வழங்குவர். எனினும், தப்பித்தவறி கீழே விழுந்து அக்குழந்தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டால், வைத்தியசாலைக்கே தூக்கிச்செல்லவேண்டும்.

எனினும், காலாவதியான குளிசைகள், மயக்கமருந்துகள் மற்றும் கண்களுக்கான சொட்டு மருந்துகளின் பயன்பாடு, நமது நாட்டிலுள்ள சில அரச வைத்தியசாலைகளில் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இதனால், பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருசில மரணங்களும் சம்பவித்துள்ளன.

பேராதனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டரை வயது குழந்தைக்கு மயக்கமருந்து விஷமானதால் மரணமடைந்துள்ளது. இந்த மரணம் முதலாவது மரணமல்ல. சுகாதார அமைச்சும், துறைசார் நிபுணர்களும், நிறுவனங்களும் திணைக்களங்களும் உறுதிபூண்டுக்கொள்ளுமாயின் அதுவே இறுதியான மரணமாக இருக்கும்.

காலாவதியான மருந்துகளின் பாவனை நமது நாட்டில் அதிகரித்துள்ளமை தொடர்பில் தொழிற்சங்கங்கள் அவ்வப்போது, சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்து கொண்டுதான் இருக்கின்றன. எனினும், அமைச்சு கவனத்தில் எடுப்பதைப் போல தெரியவில்லை.

மருத்துவத்துறையினர் கூடுமான அளவில் உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமே தவிர, உயிர்களுடன் விளையாடக்கூடாது. தற்போதைய நிலைமையை பார்க்கும் போது, நிலைமை மோசமடைந்து வருகின்றது. நுவரெலியா வைத்தியசாலையில் கண்புரை சிகிச்சை மேற்கொண்டவர்களில் பலரின் பார்வை மங்கிவிட்டது.

இன்னும் சிலருக்கு சிவந்த நிறத்தில் கண்கள் இருந்துள்ளன. அத்துடன் அரிப்பும் ஏற்பட்டுள்ளது. பார்வை திரும்பாதவர்கள் இருந்தனர். இவற்றுக்கு பிரதான காரணமாக, கிருமித்தொற்றுக்கு உள்ளான மருந்து பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டது.

காலவதியான மருந்துகளையே சுகாதார அமைச்சு இறக்குமதி செய்கின்றது என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன. ஆகையால், அதிசிரத்தை காண்பித்து மக்களின் உயிர்களை காக்கவேண்டும் என்பதுடன், காலாவதியான பொருட்கள் எங்கிருந்தாலும் குப்பைத் தொட்டியே அவற்றுக்கு சிறந்த இடமாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மெய்ஞான பலம், கல்வி பலம், உடற்பலம், ஆன்மபலம் போன்றவை இருந்தால், மனிதன் முழுமையானவனாக மிளிர முடியும்.

இவைகளை அடைவது சாமானியமானதும் இல்லை. இறைவன் துணை அவசியம். ஆணவம் மிகையானால், அறிவு குறுகிவிடும்.

சாத்வீகம், அன்பு, நேர்மை, விசுவாசம் இணைந்தால்த்தான் கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்கும்.

இந்த உலகில் அநேகர் தங்களைப் பற்றியே எண்ணியபடி இருக்கிறார்கள். பிற உயிர்கள் பற்றி எண்ணுவதற்கு நேரமும் இல்லை.

பரந்த பேரன்பு ஒருவரிடத்தில் ஒளிமயமான இதயத்தை உருவாக்கும்.

கோபதாபம், சுயநலம் என்பவற்றால் மனிதன் தன்நிலை இழக்கிறான். ஆண்டவன் பார்வையில் எல்லா உயிர்களும் ஒரே மாதிரியானவையே ஆகும்.

ஆனால், சாதாரணமான மனிதர்கள் அநேகரிடம் ஏற்றதாழ்வுகள் இணைந்தே உள்ளன. மாறும் தன்மை உள்ளவன் மனிதன். ஆனால், கெட்டவழியில் போகத்தேவையில்லை. நற்சிந்தனை அவசியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வடக்கையும் தெற்கையும் இணைக்கும் அடக்குமுறை



எம்.எஸ்.எம் ஐயூப்

வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், தமது சமூக அரசியல் உரிமைகளை அடைவதற்காக கடந்த நான்கு தசாப்தங்களாக, எவ்வளவு அடக்குமுறைகளை எதிர்நோக்கி இருப்பார்கள் என்பதை, இப்போதுதான் தெற்கில் வாழும் மக்கள் உணர ஆரம்பித்துள்ளார்கள். தம் மீதும் அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருக்கும் நிலையிலேயே, அவர்கள் இந்த உணர்வைப் பெற்று வருகிறார்கள்.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு வயது நான்கு தசாப்தங்கள் என்பது அதன் அர்த்தம் அல்ல; அந்த அடக்குமுறை 1950 களிலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால், 1980களில் இருந்தே, அந்த அடக்குமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல், தெற்கே வாழும் மக்கள் மீது, இப்போதுதான் அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பதும் அதன் அர்த்தம் அல்ல; அந்த அடக்குமுறை, இதற்கு முன்னர் ஒரு சிறிய குழுவை அதாவது, ஜே.வி.பியை குறிவைத்து கட்டவிழ்த்ததால், தெற்கே வாழும் மக்கள் அதன் பயங்கரத்தை உணரவில்லை.

இப்போது தெற்கே பெரும்பாலான மக்கள், பிரதான அரசியல் கட்சிகளை விட்டு ஒதுங்கும் நிலை உருவாகி வருவதால், அடக்குமுறையும் பெரும்பாலான மக்களை குறிவைக்கிறது. இதை அந்தப் பெரும்பாலான மக்களும் உணர்கிறார்கள்.

இதற்கு முன்னர் அடக்குமுறையானது வடக்கு, கிழக்கில் தனி நாட்டுக்கான போராட்டம் மற்றும் தெற்கில் ஆயுதப் பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றும் போராட்டம் போன்ற பாரிய அரசியல் போராட்டங்களையே குறிவைத்தது. ஆனால், தற்போதைய அடக்குமுறையானது அரசியலமைப்பால் உறுதி செய்யப்பட்ட கருத்துச் சுதந்திரம், தொழிற்சங்கப் போராட்டச் சுதந்திரம் போன்ற அடிப்படை சுதந்திரங்களையே பறிக்க முற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னரே, இந்தப் புதிய நிலைமை உருவாகி இருக்கிறது. அவர், மக்கள் ஆணை பெற்று ஜனாதிபதியாகவில்லை. மக்கள் ஆணை இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒருவருக்கு ஜனாதிபதியாவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் சட்டப் பிரமாணம் ஒன்றின் அடிப்படையிலேயே அவர் ஜனாதிபதியானார். பொருளாதார நெருக்கடியால் கோபமுற்ற மக்கள், கடந்த வருடம் இலட்சக்கணக்கில் வீதியில் இறங்கி நடத்திய பேராட்டமும் அவருக்கு உதவியது.

ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் அவர் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கை, தம்மை நாட்டில் அதிஉயர் பதவியில் அமர்த்திய போட்டக்காரர்களை, படையினரை ஏவி அடித்து விரட்டியதேயாகும். அதன் பின்னர், தம்மை ஜனாதிபதி கதிரையில் அமர்த்திய போராட்டத்தை, பாஸிசவாதம் என அவர் வர்ணித்தார். அன்று முதல் அவர், அது போன்றதொரு மக்கள் போராட்டம் தலைதூக்காதிருக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று சுமார் ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர், அவரது அரசாங்கத்தின் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, புனர்வாழ்வு பணியகம் ஒன்றை தாபிப்பதற்கான சட்டமூலத்தை வர்த்தமானி மூலம் வெளியிட்டார். அதை அவர் அதே மாதம் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

‘சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வு தேவைப்படுத்துகின்ற ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள், முன்னாள் போராளிகள், வன்முறையான அதிதீவிர குழுக்களின் உறுப்பினர்கள், மற்றும் வேறு ஏதேனும் ஆட்கள், குழுவுக்கு புனர்வாழ்வளிப்பதே இந்தச் சட்டமூலத்தின் நோக்கம்’ என அதிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தின் மூலம், அரசாங்கத்துக்கு எதிரானவர்களை எங்காவது அடைத்து வைப்பதற்கான திட்டமே இது என்பது தெளிவாகிறது. அதேவேளை, கடந்த வருடம் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை அடுத்து, அதில் கலந்து கொண்டவர்களைக் குறிவைப்பதாகவும் அமைந்துள்ளது.

முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம், எதற்காக இப்போது புனர்வாழ்வளிக்கப் போகிறது என்பது தெளிவாகவில்லை. அதேவேளை, அவர்களையும் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் அரசாங்கம் பார்க்கிறது. வன்முறையான அதிதீவிர குழுக்கள் என்றால், எவை என்பதும் தெளிவில்லாமல் இருக்கிறது.

அரசாங்கத்துக்கு எதிரானவர்களை, இந்த வகையினராக கருதி பொலிஸார் நடவடிக்கை எடுக்கலாம். ‘மற்றும் வேறு ஏதேனும் ஆட்கள்’ என்பதன் கீழ், எவரையும் புனர்வாழ்வு என்ற பெயரில் எங்காவது வருடக் கணக்கில் அடைத்து வைக்கலாம்.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் உள்ளிட்ட சிலர், அடிப்படை உரிமை மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அதன் பிரகாரம், இந்தச் சட்டமூலம் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனையவர்கள் இதில் உள்ளடக்கப்பட்டு உள்ளதன் மூலம், இந்தச் சட்டமூலம் மொத்தமாகவே அரசியலமைப்புக்கு முரணானது என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி அதனை சபையில் அறிவித்தார். அத்தோடு அரசாங்கம் அதனை கைவிட்டுவிட்டது.

இதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இது போன்றதொரு சட்டத்தை கொண்டு வந்தார். அவர், தீவிரவாதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலொன்றை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி வெளியிட்டார். அதன்படி தீவிரவாதி எனத் தாம் சந்தேகிக்கும் எவரையும் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, நீதிவானிடம் அறிவித்துவிட்டு, வழக்கு விசாரணையின்றி புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு வருடங்கள் தடுத்து வைக்க பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை விசாரித்த உயர்நீதிமன்றம், 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் ஐந்தாம் திகதி அந்த வர்த்தமானியை இடைநிறுத்தியது.

விஜயதாஸவின் புனர்வாழ்வு சட்டமூலம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே, ஜனாதிபதி ரணில் மற்றோர் அடக்குமுறை சட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிட்டார். அதன் கீழ் அவர், கொழும்பு மற்றும் புறநகர் பிரதேசங்களில் எட்டு உயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தினார். அதிலும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் கூடுவதும், ஊர்வலம் நடத்துவதும் தடை செய்யப்பட்டது.

எனவே நாட்டில், மக்களின் ஆர்ப்பாட்டங்களை தடுப்பதே இந்த உயர் பாதுகாப்பு வலயங்களின் நோக்கமென்பது தெளிவாகிறது. அதாவது, கடந்த வருட மக்கள் எழுச்சியை அடுத்து, அரசாங்கம் ஆர்ப்பாட்டங்களைப் பற்றிய பயத்துடனேயே காலத்தை கடத்துகிறது.

ஆனால், இதற்கு எதிராகவும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல அமைப்புகள் உயர்நீதிமன்றத்தை நாடவே ஒரு வாரத்துக்குப் பின்னர், அதாவது ஒக்டோபர் முதலாம் திகதி ஜனாதிபதி விக்கிரமசிங்க, மற்றொரு வர்த்தமானி மூலம் அந்த வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற்றார்.

ஆயினும், அரசாங்கம் அடக்குமுறைக்கான தமது முயற்சிகளை கைவிட்டுவிடவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, பயங்கரவாதத்துக்கு எதிராக புதிய சட்மொன்றை கடந்த மார்ச் 22ஆம் திகதி வர்த்தமானி மூலம் வெளியிட்டது. எனினும், அந்தப் புதிய சட்டமூலம், பயங்கரவாத் தடைச் சட்டத்தைப் பார்க்கிலும் மனித உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது.

அச்சட்டத்தின்படி, ஒருவர் அல்லது ஒரு குழு, எதையாவது செய்யுமாறு அல்லது செய்யாது தவிர்க்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்கத்துடன் மக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொள்வது பயங்கரவாத குற்றமாகும். அதாவது, ஏதாவது கோரிக்கையை முன்வைத்து வீதிப் போராட்டம் நடத்துவதோ, வேலைநிறுத்தம் செய்வதோ பயங்கரவாத குற்றமாகும்.

இச்சட்டமூலம், கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருந்தது. ஆயினும் அதற்கு எதிராக உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் பல்வேறு தரப்பினர் முன்வைத்த விமர்சனங்களை அடுத்து, அரசாங்கம் அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளது.

இப்போது அரசாங்கம், இலத்திரனியல் ஊடக கட்டுப்பாட்டு ஆணைக்குழுவை நியமிப்பதற்கான சட்டமூலமொன்றை தயாரித்து வருகிறது. அதற்கான ஆலோசனைகள், ஏற்கெனவே ஊடகங்களில் வெளியாகியுள்ளன. அந்த ஆலோசனைகளின்படி, அதுவும் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை பறிப்பதற்கான முயற்சியாகவே தெரிகிறது.

இது போன்ற அடக்குமுறை சட்டங்கள், நாட்டு மக்களில் ஒருசாராரை மட்டும் பாதிக்கப் போவதில்லை. வடக்கு மக்களைப் போலவே, தெற்கு மக்களையும் பாதிக்கும். அதேவேளை, வடக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கும் நாடு முழுவதிலும் சமூக அமைப்புமுறையை மாற்றி அமைப்பதற்கான ஜனநாயக உரிமை போராட்டத்துக்குமான சகல வழிவகைகளையும் இந்த அடக்குமுறைச் சட்டங்கள் மூடிவிடும்.

அவ்வாறான அரசியல் போராட்டங்களைப் பற்றி, நினைத்தும் பார்க்க முடியாத நிலையை அவை உருவாக்கும். அந்த நிலைமை, ஏற்கெனவே ஓரளவுக்கு உருவாகியும் இருக்கிறது. இதை வடக்கிலும் தெற்கிலும் உள்ள அரசியல்வாதிகள். கூட்டாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## கடிதங்கள்

### டயகம நகரத்தில் குரங்குகள் அட்டகாசம்

டயகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டயகம நகரத்தில், குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதோடு, அவற்றின் அட்டகாசங்களும் அதிகரித்துள்ளன.

வியாபார நிலையங்களில் குறிப்பாக, மரக்கறி கடைகளில் மரக்கறிகளை தூக்கி செல்வது, பாடசாலை பிள்ளைகளின் பைகளைப் பிடுங்குவது, தனியாகச் செல்பவர்களைத் துரத்துவது, நகரத்தில் பொருட்களை கொள்வனவு செய்து செல்பவர்களின் பொருட்களை பிடுங்கிச் செல்லுதல் என, குரங்குகளின் அட்டகாசம் வரையறை இன்றித் தொடர்ந்து செல்வதாகவும் அத்துடன் நகர்புற கட்டடங்களின் கூரைகளையும் உடைப்பதாகவும், குரங்குகளின் இத்தகைய தொல்லைகள், அட்டகாசங்களால் தாம் நிம்மதி இழந்து தவிப்பதாகவும் டயகம வாழ் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், அரசியல்வாதிகளுக்கும் குறித்த துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. எனவே, வெகு சீக்கிரத்தில் இக்குரங்கு பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால், டயகம நகரம் முழுக்க குரங்களால் ஆக்கிரமிக்கப்படும் அதேநேரம், மக்கள் நடமாடுவதே பெரும் சிரமமாகிவிடும். எனவே, பொதுமக்களை குரங்குகளின் அட்டகாசங்களில் இருந்து உடனடியாகப் பாதுகாக்க ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

நீலமேகம் பிரசாந்த்





# முத்துராஜா யானையால் உறவில் பாதிப்பு ஏற்படாது

எமது நாட்டுக்கு தாய்லாந்து நாட்டால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 'முத்துராஜா' யானைக்கு நேர்ந்துள்ள நிலையால் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் பாதிப்பு ஏற்படாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் செவ்வாய்க்கிழமை (20) கூடியது. அப்போது விசேட கூற்றை முன்வைத்த சுயாதீன எதிர்க்கட்சி எம்.பியான டலஸ் அழகபெரும, "தாய்லாந்தால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட முத்துராஜா யானையின் உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதையிட்டு அனைவரும் கவலையடைய வேண்டும். இந்த யானை அளுத்கம கந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டதை தொடர்ந்து, அந்த யானை உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

'முத்துராஜா' யானை தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால், 'ரெயா' அமைப்பு இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள தாய்லாந்து தூதரகத்தில்



முறைப்பாடளித்துள்ளது. இதனை தொடர்ந்து, இந்த யானையை மீண்டும் தாய்லாந்துக்கு கொண்டு செல்ல தாய்லாந்து தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது நாட்டுக்கு கரும்புள்ளியாக அமைகின்றது. ஆகவே தாய்லாந்து நாட்டால் வழங்கப்பட்ட 'முத்துராஜா' யானை விவகாரத்தில் அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் தாய்லாந்து அரசாங்கத்திடம் கவலை தெரிவிக்க வேண்டும்" என்றார்.

இதற்கு பதிலளித்த வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தாய்லாந்து நாட்டால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 'முத்துராஜா' என்ற யானை, முன்னாள் ஜனாதிபதியால் அளுத்கம கந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. விகாரைக்கு வழங்கப்பட்டதன் பின்னர், வனஜீவராசிகள் திணைக்களம் பொறுப்பேற்க முடியாது என்றார்.

இந்த யானை விவகாரம் தொடர்பில் கொழும்பில் உள்ள தாய்லாந்து தூதரகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இருப்பினும் இந்த யானையை தாய்லாந்துக்கு கொண்டு செல்லும் உறுதியான நிலைப்பாட்டில் தாய்லாந்து அரசாங்கம் உள்ளது என்றார்.

இதையடுத்து எழுந்த சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி அநுர பிரியதர்ஷன யாப்பா, தாய்லாந்து நாட்டால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட யானை பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் இராஜதந்திர மட்டத்தில் கவலை தெரிவிக்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, அண்மையில் தாய்லாந்து நாட்டுக்கு அரசமுறை பயணத்தை மேற்கொண்டிருந்த போது, 'முத்துராஜா' யானை விவகாரம் தொடர்பில் நாடு என்ற ரீதியில் கவலை தெரிவித்துள்ளோம். ஆகவே, தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் இந்த யானையால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார்.

## கடைகளுக்கு சஜித் செல்வதில்லை



80 ரூபாய்க்கு நெல் கொள்வனவு செய்யப்படும் போது அரிசி ஒரு கிலோ கிராம் 200 ரூபாய் மற்றும் 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கின்றார். எனினும், லுனுகம்வெஹெர பகுதியில் வீதிக்கு அருகில் 5 கிலோ கிராம் அரிசி பொதிகள் கிலோ கிராம் 125 -130 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் நீண்ட காலமாக கடைகளுக்கு செல்வதில்லை என்பது இதன் மூலம் தெரிகிறது என அமைச்சர் மஹிந்த அமரவீர கிண்டலடித்தார்.

நாட்டில் பெருமளவு மக்கள் நாட்டரிசி மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஆகியவற்றையே உணவுக்காக கொள்வனவு செய்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கும் வகையில் அந்த அரிசி வகைகள் 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதில்லை என்றார்.

## வீண் விரயங்களை கட்டுப்படுத்த வேண்டும்



பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் இடம்பெறும் வீண் விரயங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் முன்னுரிமையளித்து செயற்பட வேண்டியது அவசியமென பிரதமர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தினார்.

சில புள்ளி விவரங்களில் காணப்படும் தவறுகள் மற்றும் திசை திருப்பும் விடயங்கள் காரணமாக ஏற்படும் மோசடிகளின் சுமையை இறுதியில் திறைசேரியே ஏற்க வேண்டியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற பாராளுமன்ற வரவு -செலவுத் திட்ட அலுவலகம் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச திணைக்களங்கள், நிறுவனங்களின் மூலம் இத்தகைய வீண் விரயங்கள் மேற்கொள்ளப்படுவதை நாம் இல்லையென்று கூறமுடியாது. இந்த வீண் விரயங்களை குறைத்துக் கொள்வதே எமது இலக்காகும்.

அதனை முக்கியமான இலக்காகக் கொண்டு அதற்கு முன்னுரிமையளித்து நாம் செயற்படவேண்டியது அவசியமாகும் என்றார்.

## நீதி நிலைநாட்டப்படுவது குறித்து நம்பிக்கை இல்லை



கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதற்கு தடையாக இருந்தன. வர்த்தகர் தினேஷ் சாப்டரின் கொலை தொடர்பாக இன்னும் நீதி கிடைக்கவில்லை. ஓமான் நாட்டு முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் இதுவரை அவருக்கு நீதி கிடைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி எரான் விக்ரமரத்ன , நாட்டில் நீதி நிலைநாட்டப்படுவது தொடர்பில் நம்பிக்கை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே முதலில் சட்டம் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற பாராளுமன்ற வரவு செலவு திட்ட அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## சிறந்த பாதை நோக்கி பயணிக்க வேண்டும்



சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் சிறந்த பாதை நோக்கி பயணிக்க வேண்டும். அதற்கு பரிந்துரைக்கப்பட்ட யோசனைகள் சட்டமாக்கப்பட வேண்டும். எனவே, பொருளாதார முன்னேற்றத்துக்காக எதிர்வரும் நாள்களில் பல சட்டமூலங்களை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்போம் என்று பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார பாதிப்புக்கு முன்னர் வெளிப்படை தன்மைக்கான சட்டங்களை இயற்றியிருந்தால் பாரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கலாம். அரசியல் தலையீடு இல்லாத வகையில் பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

பொருளாதார முன்னேற்றம், நிதி விவகாரத்தில் வெளிப்படை தன்மையுடன் செயற்பட கவனம் செலுத்தியுள்ளோம். வெளிப்படை தன்மையை சட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்துவது எமது பிரதான நோக்கமாகும். வரலாற்று ரீதியில் எடுத்த தவறான தீர்மானங்களை திருத்திக் கொண்டு முன்னேற்றமடைவது அவசியம். நிலையான பொருளாதார முன்னேற்றத்துக்கு குறுகிய கால அடிப்படையில் கடுமையான தீர்மானங்களை செயற்படுத்த வேண்டும் என்றார்.



## தலவாக்கலையில் இருந்து பாதயாத்திரை





கதிர்காமம் கொடியேற்றத்தை தொடர்ந்து, தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவில் பாதயாத்திரை குழுவினர் தமது பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளனர். இந்தப் பாதயாத்திரை குழு லிந்துலை, நானுஓயா, நுவரெலியா, சீத்தாஎலிய, ஹக்கல, பொரகஸ், கெப்பட்டிபொல, வெலிமட, பண்டாரவளை, எல்ல, வெல்லவாய, புத்தள வழியாக கதிர்காமத்தை சென்றடையவுள்ளது.

பி. கேதீஸ்





## கதிர்காம கொடியேற்றம்

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம கந்தன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் கொடியேற்றத்துடன் திங்கட்கிழமை (19) கதிர்காமம் பால்குடி பாவா பள்ளி வாசலில் இடம்பெற்றது.

வி.ரி சகாதேவராஜா





## நயினாதீவு கொடியேற்றம்

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா, நேற்று முன்தினம் (19) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கோவிலில் இடம்பெற்ற விசேட பூஜைவழிபாடுகளை தொடர்ந்து, வசந்தமண்டப பூஜை இடம்பெற்று கொடியேற்ற உற்சவம் நடைபெற்றது.

நிதர்சன் வினோத்





## 'ஞானோதயம்' புலமைப் பரிசில் வழிகாட்டி

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கத்துடன் குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள கோபாலபுரம் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1,680 ரூபாய் பெறுமதியான 'ஞானோதயம்' புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல், நேற்று (20) திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசனால் வழங்கிவைக்கப்பட்டது.

அ. அச்சுதன்



## 'தேசமான்ய' கௌரவம்

உக்குவளை, மாருகோனயைச் சேர்ந்த எம்.எம் சபீர் மற்றும் குரீவெலயைச் சேர்ந்த எம். பர்சான் ஆகியோர், கலாசார அலுவல்கள் அமைச்சர் விதூர விக்கிரமநாயக்கவால் 'தேசமான்ய' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர் இந்நிகழ்வு கண்டி குயீன்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

ஏ.எம் ஜலீல்

பாலசோர்

# பொறியாளர் தலைமறைவு

ஒடிசா ரயில் விபத்து தொடர்பான சிபிஐயின் விசாரணை வளையத்தில் இருந்த ரயில்வே பொறியாளர் தலைமறைவானதால், அவரின் வீட்டுக்கு பொலிஸார் சீல் வைத்தனர்.

ஒடிசா மாநிலம், பாலசோர் மாவட்டத்தில் மூன்று ரயில்கள் மோதிக் கொண்டதில் 290க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்தக் கோர விபத்து தொடர்பான விசாரணை சிபிஐக்கு மாற்றப்பட்டது.

விபத்து நடந்தபோது பணியில் இருந்த சிலரை சிபிஐ தங்களின் வளையத்துக்குள் கொண்டுவந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


இந்நிலையில், சிபிஐயின் விசாரணை வளையத்தில் இருந்த சிக்னல் பிரிவு இளநிலை பொறியாளர், பாலசோரில் அவர் குடியிருந்த வீட்டை பூட்டிவிட்டு குடும்பத்துடன் தலைமறைவாகியுள்ளார்.



தெஹ்ரான்

# தண்ணீர் பிரச்சினையால் எல்லையில் பதற்றம்

ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் ஆற்றில் இருந்து ஈரானுக்கும் தண்ணீர் பாய்கிறது. இந்த நிலையில், நீரைப் பகிர்ந்து கொள்வதில் கடந்த சில மாதங்களாக இரு நாடுகளுக்கும் இடையேயும் ஏற்பட்ட விரிசல் தற்போது வன்முறையாக வெடித்துள்ளது.



இந்த விவகாரத்தில் ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசு வேண்டுமென்றே தங்களுக்கு தண்ணீர் வழங்குவதை தடுப்பதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது. ஆனால், போதிய மழையின்மை மற்றும் ஆற்றில் நீரின் மட்டம் குறைவாக இருப்பதன் காரணமாக ஈரானுக்கு நீரை வழங்க முடியவில்லை என்று தலிபான்கள் அரசு விளக்கம் அளித்துள்ளது.

எனினும், தண்ணீர் பிரச்சினை காரணமாக ஈரான் - ஆப்கான் எல்லையில் பதற்றம் நிலவுகிறது. இரு நாட்டு இராணுவ வீரர்களும் எல்லையில் மோதிக் கொண்டனர். இரு தரப்பும் மாறி மாறி குற்றம் சுமத்தி வருகின்றனர்.



சண்டிகர்

## 8.50 கோடி ரூபாய் கொள்ளை; பழச்சாற்றில் சிக்கிய ஜோடி

நிதி நிறுவனமொன்றில் துப்பாக்கி முனையில் 8.50 கோடி ரூபாயை கொள்ளையடித்த குழுவைச் சேர்ந்த இளம் ஜோடியொன்று கோவிலில் வழங்கிய பழஜூஸில் சிக்கிக்கொண்ட சம்பவம் பஞ்சாப்பில் இடம்பெற்றுள்ளது.

பட்டப்பகலில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பஞ்சாப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. சந்தேகத்தின் பேரில் எழுவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணைகளில், அக்கும்பலைச் சேர்ந்த கணவன், மனைவி தொடர்பிலான தகவல் கசிந்தது.

தம்பதியை கைது செய்ய பொலிஸார் தீவிரம் காட்டினர். நேபாளம் தப்பிச்செல்ல தம்பதி திட்டமிட்டிருந்ததாக தகவல் கிடைத்தது. எனினும், உத்தரகாண்ட்டில் உள்ள சீக்கிய மத, இந்துமத வழிபாட்டு தலங்களுக்கும் செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

அங்கு பக்தர்கள் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்த நிலையில், தம்பதியை கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால், வித்தியாசமான திட்டம் தீட்டிய பொலிஸார், வழிபாட்டு தலத்திற்கு வரும் பக்தர்களுக்கு 10 ரூபாய்க்கு வழங்கப்படும் ஜூசை பொலிஸார் இலவசமாக வழங்கினர். பஞ்சாப் பொலிஸார் மாறுவேடம் அணிந்து, இலவசமாக பழ ஜூஸ் வழங்கினர். அதன்போது அந்த ஜோடியை பொலிஸார் கண்டுப்பிடித்தனர்.


கைது செய்யப்பட்ட தம்பதியிடமிருந்து 21 இலட்ச ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 8 கோடி ரூபாயில் இதுவரை 6 கோடி ரூபாயை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மத்திய பிரதேசம்

## காதல் ஜோடியைக் கொன்று முதலைகளுக்கு இரை


தங்களுடைய விருப்பத்துக்கு மாறாக காதலித்த ஜோடியை அப்பெண்ணின் தந்தை கொலைச் செய்து, முதலைகள் நிறைந்த ஆற்றில் வீசிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்ப்பை மீறி காதலர்கள் இருவரும் தொடர்ச்சியாக சந்தித்து பேசி வந்துள்ளனர். இது பெண்ணின் குடும்பத்திற்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், ஜோடி ஒன்றாக சந்தித்துள்ளனர். அப்போது இருவரையும் கடத்தி சென்று சுட்டு கொலை செய்துள்ளனர்.



அத்துடன் இருவரின் உடலையும் முதலைகள் அதிகம் இருக்கும் சம்பல் நதியில் வீசியுள்ளனர்.

அதன்பின்னர் குடும்பத்தாருடன் தலைமறைவாகியிருந்த பெண்ணின் தந்தை, இரட்டைப் படுகொலையை ஒப்புக்கொண்டதை அடுத்து கைது செய்யப்பட்டார்.



நுவாபாடா

## ரூ.2.5 இலட்சம் பெறுமதியான 4 மாம்பழங்கள் திருட்டு

ஒரு கிலோ கிராம் ரூ. 2.5 இலட்சத்துக்கு விற்பனையாகும் விலை உயர்ந்த மாம்பழங்கள் ஒடிசா மாநிலத்தில் திருடுபோயுள்ளன.

ஒடிசாவின் நுவாபாடா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி, தனது விவசாய தோட்டத்தில் சுமார் 38 வகையிலான மாம்பழ ரகங்களை சாகுபடி செய்துள்ளார். அவற்றின் மதிப்பு குறித்து நன்கு அறிந்த அவர், அது குறித்த தகவலையும், மாம்பழங்களின் புகைப்படங்களையும் சமூக வலைதளங்கள் மூலம் வெளியிட்டார். இதில் விலை உயர்ந்த மாம்பழ ரகமும் அடங்கும்.


மாம்பழங்கள் குறித்து சமூக வலைதளங்களில் பெருமையுடன் பகிர்ந்த அடுத்த சில மணி நேரத்தில், தோட்டத்தில் இருந்த விலை உயர்ந்த மாம்பழங்கள் நான்கு திருடப்பட்டுள்ளன. இந்த ரக மாம்பழங்களின் விலை கிலோ கிராம் ரூ.2.5 இலட்சம் என சொல்லப்படுகிறது.

## போதையில் தள்ளாடிய பெண்ணை தூக்கிச் சென்று பலாத்காரம்

பிரிட்டன் நாட்டின் கார்டிப் பகுதியில் வசித்து வந்த இந்திய மாணவர் அருகே உள்ள இரவு விடுதிக்குச் சென்றுள்ளார். அப்போது ஓர் இளம்பெண்ணும் தனது நண்பர்களுடன் இரவு விருந்துக்காக வந்துள்ளார்.


அங்கு அவர்கள் மது போதை கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். வெளியே வந்த அந்த இளம்பெண்ணுக்கு அதீத போதை காரணமாக நினைவு சரியாக இல்லை. அரை மயக்க நிலையில் பெண் தள்ளாடிக்கொண்டிருந்துள்ளார். பெண்ணின் நிலையை உணர்ந்து கொண்ட இந்திய மாணவர் அதை தனக்கு சாதகமாக மாற்றிக்கொண்டார்.

பெண்ணுக்கு அருகே சென்று அவருக்கு தோள் கொடுத்து உதவுவது போல சென்று அப்படியே அவரை தூக்கிக்கொண்டு தனது வீட்டிற்கு வந்துள்ளார். அங்கு வைத்து பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கியுள்ளார்.



விடிந்த பின் பெண்ணுக்கு நினைவு வந்த போது தான் வேறு ஒருவரின் படுக்கையில் நிர்வாணமாக கிடந்ததை பார்த்து பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கோபமடைந்த பெண் உடனடியாக பொலிஸில் புகார் அளித்துள்ளார்.

அதன் பேரில் பொலிஸார் விசாரணை மேற்கொள்ளத் தொடங்கினர். விசாரணையின் போது சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்தனர். அப்போது, பிரீத் போதையில் இருந்த இளம்பெண்ணை சாலையில் தூக்கிச் செல்லும் காட்சிகள் தெளிவாக பதிவாகியிருந்தது. இளம்பெண் தனது படுக்கையில் இருக்கும் புகைப்படத்தை நண்பர்களுக்கு பகிர்ந்துள்ளார். அதனடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.



## நீரை எடுப்பதால் பூமி கிழக்கே சாய்ந்து உள்ளது


பூமியில் இருந்து மனிதர்களால் அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் நாம் வாழும் பூமி 1993 மற்றும் 2010 ஆண்டுகளுக்கு இடையில் கிட்டத்தட்ட 80 சென்றிமீற்றர் கிழக்கே சாய்ந்து உள்ளதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர். இதன் காரணமாக பூமியின் காலநிலையில் பெரிய பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஜியோபிசிகல் ரிசர்ச் லெட்டர்ஸ் என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆராய்ச்சி தகவலில் 1993ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை மட்டும் 2,150 ஜிகா தொன் நிலத்தடி நீர் மனிதர்களால் உறிஞ்சப்பட்டு உள்ளது. இது 6 மில்லி மீட்டருக்கும் அதிகமான கடல் மட்ட உயர்வுக்கு சமம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டைட்டானிக்கை பார்க்கச் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் மாயம்

நூறு வருடங்களுக்கு முன்னர் அட்லாண்டிக் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் உடைந்த பாகத்தை பார்வையிட சென்ற சுற்றுலா பயணிகளின் நீர்மூழ்கிக் கப்பல் மாயமாகி இருக்கிறது.

21 அடி நீளம் கொண்ட நீர் மூழ்கி கப்பல் ஒன்று 5 சுற்றுலா பயணிகளுடன் (பயணத்தில் பிரிட்டீஷ் கோடீஸ்வரர் ஒருவரும் இருந்துள்ளார்) அட்லாண்டிக் கடலில் ஞாயிற்றுக்கிழமை (18) புறப்பட்டுள்ளது. புறப்பட்ட 2 மணி நேரத்தில் நீர் மூழ்கி கப்பல் தனது சிக்னலை இழந்துள்ளது. நீர் முழ்கி கப்பலில் பயணித்த



பயணிகளின் நிலைமை திங்கட்கிழமை (19) வரை தெரியவில்லை. மாயமானவர்களை மீட்கும் பணியில் கனடா - அமெரிக்கா கடற்படைகள் இறங்கி உள்ளன.

மீட்புப் பணிகள் குறித்து அமெரிக்க கடற்படை கூறும்போது, "அந்த தொலைதூரப் பகுதியில் தேடுதல் நடத்துவது சவாலானது. அவர்களை கண்டுபிடிக்க அனைத்து தொழில் நுட்பங்களையும் நாங்கள் பயன்படுத்துகிறோம். அவர்களது கப்பலில் போதுமான அளவு ஒக்சிஜன் இருப்பதாக நம்பப்படுகிறது" என்று தெரிவித்துள்ளது.

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பல் 1985 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து அந்த கப்பல் விரிவாக ஆராயப்பட்டது. சமீபத்தில் கூட அதன் முப்பரிமாண வடிவம் வெளியிடப்பட்டது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# அமீரகத்தை வீழ்த்திய இலங்கை

### அயர்லாந்தை வென்ற ஓமான்

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய அரபு அமீரகத்துடனான குழு பி போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஐ.அ. அமீரகம்

இலங்கை: 355/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 78 (63), சதீர சமரவிக்கிரம 73 (64), பதும் நிஸங்க 57 (76), திமுத் கருணாரத்ன 52 (54), சரித் அஸலங்க ஆ.இ 48 (23), வனிடு ஹஸரங்க ஆ.இ 23 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: அலி நஸீர் 2/44, பஸில் ஹமீட் 1/19, அயன் கான் 1/52)

ஐ.அ. அமீரகம்: 180/10 (39 ஓவ. ) (துடுப்பாட்டம்: முஹமட் வஸீம் 39 (48), விரித்தியா அரவிந்த் 39 (55), அலி நஸீர் 34 (32) ஓட்டங்கள். பந்துவீச்சு: வனிடு ஹஸரங்க 6/24, லஹிரு குமார 1/26, மகேஷ் தீக்ஷன 1/43, தனஞ்சய டி சில்வா 1/25)

போட்டியின் நாயகன்: வனிடு ஹஸரங்க

இந்நிலையில், ஓமானுடனான போட்டியில் அயர்ல்லாந்து தோல்வியடைந்திருந்தது.



அணித்தலைமைப் பிரச்சினைக்கு மத்தியில்

## பெல்ஜிய அணி முகாமிலிருந்து வெளியேறிய கோர்துவா

யூரோ கிண்ண தகுதிகாண் போட்டியொன்றுக்கு முன்பாக அணித்தலைவராக தெரிவு செய்யப்படாமையால் பெல்ஜியத்தின் பயிற்சி முகாமிலிருந்து வெளியேறும் திபோ கோர்துவாவின் முடிவானது குழாமை நெருக்கடி நிலைமைக்குள் நேற்று முன்தினம் தள்ளியுள்ளது.

அணிக்குள் மதிக்கப்பட்டதாகக் உணராமையால் திடீரென கோர்துவா முகாமை விட்டு வெளியேறியதாக பெல்ஜியப் பயிற்சியாளர் டொமெனிக்கோ டெடெஸ்கோ தெரிவித்த நிலையில், இதை மறுத்துள்ள கோர்த்துவா, முழங்கால் பிரச்சினையொன்று காரணமாக முகாமை விட்டு வெளியேறியதாகக் கூறியுள்ளார்.



அஸ்பன்யோலிருந்து

## ஜொசெலுவை கடனடிப்படையில் கைச்சாத்திட்ட மட்ரிட்



ஸ்பானியக் கழகமான அஸ்பன்யோலிலிருந்து முன்களவீரரான ஜொசெலுவை ஒரு பருவகாலத்துக்கு கடனடிப்படையில் ஸ்பானிய லா லிகாக் கழகமான றியல் மட்ரிட் கைச்சாத்திட்டுள்ளது.

இந்நிலையில் பருவகால முடிவில் 33 வயதான ஜொசெலுவை வாங்குவதற்கான தெரிவையும் மட்ரிட் கொண்டிருக்கின்றது.

கடந்த லா லிகா பருவகாலத்தில் மூன்றாவது அதிகபட்சமாக 16 கோல்களை ஜொசெலு பெற்றிருந்தார்.

யுனைட்டெட்டில்

## நீண்ட கால ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ள றஷ்ஃபோர்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான மார்க்கஸ் றஷ்ஃபோர்ட், புதிய நீண்ட கால ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுவதை நெருங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. தற்போதைய தனது வாரத்துக்கு 250,000 ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் ஒப்பந்தத்தில் இறுதியாண்டில் றஷ்ஃபோர்ட் அடுத்த வாரம் நுழையவுள்ள நிலையில், வாரத்துக்கு 375,000 ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை பெறும் ஒப்பந்தத்தை அவர் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளராக என்றிக்கே

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனானது தமது புதிய முகாமையாளராக லூயிஸ் என்றிக்கேயை நியமிப்பதை நெருங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.



தமது முகாமையாளர் கிறிஸ்டோஃப் கல்டியரின் வெளியேற்றத்தை பரிஸ் ஸா ஜெர்மைன் இதுவரையில் உறுதிப்படுத்தாதபோதும் கழகத்தில் அவரது காலமானது கடந்த பருவகாலத்துடன் முடிவடைந்து விட்டது எனக் கருதப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 21 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.